REGD No. M. 464

திராவிடநாடு

இலங்கை 15 சதம் | விலை அணா 2

மலர் 9 | 25—2—51 | இதழ் 36

★ டில்லியில் ட்ரூமன்! ★

அரங்கண்ணல்

தர்ப்பை வாளாகிவிட்டது!

சாணக்கியர் வீரராகிவிட்டார்!

ஆமாம், நண்பர்களே, ஆமாம். இரதகஜ துரகபதாதிகளிருக்கின்றன என்ற மமதையும், என்னைக் கேட்க யார் இருக்கிறார்கள் என்ற கர்வமும், எதுவேண்டுமானாலும் செய்ய முடியும் என்ற அதிகார போதையும், அன்பர் ஆச்சாரியாரை, அந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றன.

'திருச்செங்கோடு' கண்டு, திருவந்தாதி பாடி, இடந்தேடி, டில்லியை அலங்கரித்த ஆச்சாரியார், இப்போது புதுக்கோலம் பூண்டிருக்கிறார்!

நெஞ்சிலே வீரம் கூட வந்துவிட்டது அவருக்கு. விவேகி — என்று சொல்வார்கள், அவரை. பலர் 'குல்லூகபட்டரப்பா, ஆச்சாரியார்' என்றும் அழைப்பார்கள், அவரது புத்தி கூர்மையைக் கண்டு.

"இல்லை! எல்லாப் பெயரையும் விட இதுவே பொருத்தம். அவர் சாணக்கியர்" என்பர், சில திருத்தக்காரர்கள்.

இந்தப் பெயரில் எது அவருக்குச் சரி அல்லது எல்லாமே அவருக்குப் பொருந்துமா என்பதல்ல, நமது சிந்தனைக்குரியது.

காக்கை குயிலாவதும், கருங்குரங்கு மன்மதன் என்று அழைக்கப்படுவதும், கையாலாகாதவன் வில்லாதி வில்லன் என்று போற்றப்படுவதும், சகஜமாகிவிட்ட காங்கிரஸ் ஆட்சியில், கொஞ்சம் சாதுர்யமும், சூட்சும புத்தியும் கொண்ட ஆச்சாரியார் சாணக்கியராகவோ, தர்ப்பையை வாளாக்கும் ஆற்றல் பெற்றவராகவோ இருப்பது, அதிசயத்துக்கான விஷயமல்ல.

ஆனால், அவரே, போர்க்கோலம் பூணுகிறார் என்று கேள்விப்படும் போதுதான் நமக்கு ஆச்சரியமும் திகைப்பும், அதிகரிக்கிறது.

போர்க்கோலம்!—அதுவும், சாதாரணமானதல்ல; உலகிலே பரவி வரும், ஒரு கொள்கையையே எதிர்த்துத் தூளாக்கக் கச்சை கட்டிக் கொண்டு புறப்பட்டிருக்கிறார்!

புதுமை! விந்தை! வேடிக்கை! எப்படி வேண்டுமானாலும் கூறிக் கொள்ளுங்கள். ஆனால், அவர் போர்க்கோலம் பூண்டுவிட்டது மட்டும் உண்மை.

போர்க்கோலம் என்றால் சாமான்யமான போர்க்கோலமல்ல!

பணத்தைச் சாமாரியாக இறைத்து, புதப்பாதந்தாங்கிகளைத் தன் கைக்குள் போட்டு, 'அணுகுண்டு இதோ' 'பரமாணுகுண்டு அதோ' என்றெல்லாம் தினசரி ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் ட்ரூமனே, திக்கித் திண்டாடும், ஒரு காரியத்தைச் செய்து காட்டப் புறப்பட்டிருக்கிறார்.

அண்மையில் டில்லி சட்ட சபையில், அதுபற்றியும் அறிவித்துவிட்டார்.

பாதுகாப்பு மசோதா என்ற பெயரில், ஆட்பிடிப்புச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்ற, அவர் ஆற்றிய சொற்பெருக்கினூடே, தம்முடைய அந்த ஆசையை வெளியிட்டிருக்கிறார்.

ஆச்சாரியார், இப்போது டில்லி மாளிகையில், கைலாகு தர ராஜாதி ராஜாக்களும், 'என்ன வேண்டும்'

எழுத்துரிமைப் போர்

✕

வட ஆற்காடு மாவட்ட முழுமையும்.

✕

மார்ச்சு முதல் நாள்

—வட ஆற்காடு தி. மு. க.

என்று குழைவு நெளிவோடு கேட்க டாடா பிர்லாக்களும், இட்டதைச் செய்ய எடுபிடிகளும், மாடிவாசமும், மாலை மரியாதைகளும் பெற்றுக் கொண்டிருந்தாலும் உங்களுக்கெல்லாம், தெரிந்தவர் தான்.

தமிழ் நாட்டுக்கு அவர் உருவம் மட்டுமல்ல; உள்ளமும் போக்கும் நன்றாகத் தெரியும்; புரியும்.

சில ஆண்டுகளுக்கு முன் பொன்மலையில் நடைபெற்ற கம்யூனிஸ்டுகளின் ரயில்வே சம்மேளன மாநாட்டையும், அதிலே கலந்துகொண்டு கம்யூனிசத்தின் மேன்மை, கம்யூனிஸ்டுகளின் தியாகம் ஆகியவைகள் குறித்தும் வீர முழக்கமிட்டதையும், அந்தக் காட்சிகளை, அவர் கூட்டத் திருஏடு "கல்கி" படம் படமாகப் பிரசுரித்து, எழுதியதையும், நாடு மறந்திருக்காது.

அத்தகையவர் தான், இப்போது, டில்லி சட்டசபையில் பேசியிருக்கிறார்:-

"தாங்கள் சமாதானத்துக்காகப் பாடுபடுவதாகச் சொல்லி ஒன்றுந் தெரியாத மக்களை வேண்டுமானால் கம்யூனிஸ்டுகள் குழப்பலாம். ஆனால் அவர்கள் நோக்கம் சமாதானமல்ல. நிலைமையைச்சாதகமாக்கி கலவரத்தையும் குழப்பத்தையும் உண்டாக்குவதே அவர்கள் எண்ணம்."

பொன்மலையிலே பாராட்டு!

புது டில்லியிலே வசைமாரி!— அவருடைய இந்தப் போக்குகூட அல்ல, நமக்கு ஆச்சரியத்தைத் தருவது.

இடபேதம்—காரணமாக, அவர் இந்த நிலையில் உள்ளார் என்றுகூட ஒதுக்கிவிடலாம். அதோடு, இந்தியக் கம்யூனிஸ்டுகள்மீது அவர் சாட்டும் குற்றம் உண்மையா, இல்லையா என்பதுகூட அல்ல நாம் கவனிக்க வேண்டியது. ஆச்சாரியார்—இந்திய கம்யூனிஸ்டுகளை மட்டுமின்றி உலகக் கம்யூனிஸ்டுகளையே குற்றம் சாட்டியிருக்கிறார்.

இதைப் பார்க்கும்போதுதான் இந்திய சர்க்காரிலிருப்போரைப் பற்றி, நமக்குச் சிரிப்பும் சிந்தாகூலமும் ஓடிவருகிறது.

ஆச்சாரியார்—உலக கம்யூனிஸ்டுகளைக் கண்டிக்கிறார். அவர்களால் உலக சமாதானம் ஏற்பட முடியாது என்று கூறுகிறார்.

ஆனால் அவரது சகா, இந்தியப் பிரதமர் பண்டித நேருவோ: "கம்யூனிச நாடுகளை விரோதிகளாகவே பாவிப்பது உலக நன்மைக்கு நல்லதல்ல. விரோத மனப்பான்மையை வளர்த்துக்கொண்டே போவது விபரீதத்தைத்தான் தரும். கம்யூனிச சீனாவை, அங்கீகரிப்பது பற்றி காலதாமதம் செய்வதும், அதனால் கலவர நிலைகளைச் சிருஷ்டிப்பதும் உலக சமாதானத்துக்கு உகந்ததல்ல."

பண்டிதர் சமரசகீதம் பாடும் போது, ஆச்சாரியார் தோள் தட்டுகிறார்.

உலக சமாதானத்துக்கு—நேரு தரும் விளக்கம் ஒன்று.

அன்பர் ஆச்சாரியார் தரும் விளக்கம் வேறொன்று.

இரண்டு விளக்கங்கள்; இரண்டும் நேர் எதிர் முரண்!

ஆனால் இருவரும் மந்திரிகள்—அதுவும் ஒரு நாட்டின் வாழ்வை நிர்ணயிக்கும் மந்திரிகள்.

"சி. ஆர். கூறிய இந்த வார்த்தைகளின் பொருளைக் கவனித்தால் பண்டித நேருவின் சமரசக் கொள்கையைக் கண்டிக்கிறார் என்றே பொருள் கொள்ள வேண்டும்."

என்பதாக, ஆச்சாரியாரின் கூற்று பற்றி, அறிஞர் எம். என். ராய், தமது "Radical Humanist" இதழில் தீட்டியிருக்கிறார்.

ஆழ்ந்து, ஆச்சாரியார் வார்த்தைகளைக் கவனிப்போருக்கு இந்தக் கருத்தே ஏற்படும்.

பொன்மலையில ஐந்து ஆண்டுகளுக்குமுன், போற்றிப் புகழ்ந்தவர், இன்று 'கைது—சிறை' தர ஏற்பாடு செய்கிறார்.

இந்திய நாட்டிலுள்ள கம்யூனிஸ்டுகளின் போக்கு சரியில்லை; ஆகவே, பாதுகாப்புச் சட்டம் தேவைப்படுகிறது என்று காரணங் காட்டி, அடக்குமுறைச் சட்டம் கொணரும் அவர், இந்திய கம்யூனிஸ்டுகளோடு நில்லாது உலக கம்யூனிஸ்டுகள் பக்கமும் போகிறார்!

ஆச்சாரியாருக்கு, சூட்சுமபுத்தி மட்டுமே உண்டு என்று கருதியிருந்தோர், இப்போது துணிச்சல்கூட வந்திருப்பதைக் காண்பர்!

உலகிலே, கம்யூனிசத்தை எதிர்த்து முடியாக நிற்பவர்—ட்ரூமன் ஒருவர்தான் என்று எண்ணியிருந்தோம்.

"இல்லை! இதோ நான் ஒருவன் இருக்கிறேன்" என்று 'டில்லி ட்ரூமன்' புறப்படுகிறார்.

அமெரிக்க ட்ரூமனாவது, முதலாளித்துவக் கொள்கையைக் காக்க வேண்டும் என்ற எண்ணத்தில், கம்யூனிஸ்டுகள்மீது கவலையும் கவனமும் கொண்டிருக்கிறார்.

"ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை இங்கு" என்று பாடிய திருக்கூட்டத்தாரான இவர், எதற்காகப் போர்க்கோலம் பூணுகிறாரோ தெரியவில்லை!

X X X

ட்ரூமனின் ஆசை, அமெரிக்க ஆதிபத்யம் வளர வேண்டும், தங்களது ஏகேச்சாதிகாரம் மேலோங்க வேண்டும் என்பதாகும்.

அந்த ஆசை, அன்பர் ஆச்சாரியாரின் கட்சியினருக்கும், அதிகமாகி விட்டதுபோலும்.

பாதுகாப்புச் சட்டம்! — கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள்.

சுயராஜ்ய சர்க்கார், என்று சொல்லிக் கொள்ளும் ஆட்சியில் பாதுகாப்புச் சட்டம்!

பாதுகாப்பு. யாருக்கு? மக்களுக்கல்ல; சுயநல முதலைகளின் கோரவாயில் சிக்கித் தவிக்கும் ஏழைகளுக்கல்ல!

கள்ள மார்க்கெட் கும்பலும், கொள்ளை லாபக்கூட்டமும் இந்திய உபகண்டத்தில் நாசகார்த்தனம் புரிகின்றனர். அவர்களின் அடாவடியும் அட்டகாசமும் மனித வரம்பையும் மீறிவிட்டன.

மிகவும் மோசமாக நடந்து கொள்கிறார்கள — இது, நாம் கூறுவதல்ல பாதுகாப்புச் சட்டத்தின்மீது பேசியபோது அன்பர் ஆச்சாரியாரே வெளியிட்டிருக்கிறார், ஒரு தகவல்:-

"தீபாவளிப் பண்டிகையின் போது சென்னையிலுள்ள வியாபாரிகளில் சிலர் அநுவருக்கத்தக்க அக்கிரமம் செய்ததாக, நான் அங்குபோயிருந்தபோது கேள்விப்பட்டேன். வெல்லம் கிடைப்பது கஷ்டமாகப்போகவே சாணியையும் வெல்லத்தையும்கலந்து, வெல்லம் என்ற பெயரில் விற்கப்பட்டதாம்"

(11-ம் பக்கம் பார்க்க)

கொத்தனார் பிரின்சிபாலாகிறார்!

கொத்தனார் குமாரசாமி என்னைப் பார்த்துச் சிரித்தார். நானும் இலேசாகச் சிரித்தேன்.

அவர் ஏன் என்னைப் பார்த்துச் சிரித்தார் என்று முதலில் எனக்குப் புரியவில்லை. இருந்தும் இருவரும் சிரித்தோம்.

"கொத்தனாரே, ஏன் சிரிக்கிறீர்கள்?" என்றேன் நான். அவர் சிரிப்பிறகுக் காரணம் பிறகு தெரியாமல் போகவில்லை. தெரியும். தெரிந்தது மட்டுமல்ல, எனக்கும் அந்த மகிழ்ச்சியில் பங்கு உண்டு.

கல்வியிலே நாட்டமுள்ள காளைகள் ஏராளம் தோன்றிவிட்டனர். ஆனால் அந்தப் பகுதிக்கு ஒரு கல்லூரி இல்லை இந்தக் குறையைத் தீர்க்க ஊரார் ஒன்று கூடினர். திட்டம் வகுத்தனர். கல்லூரி கட்டி முடித்துவிடுவது என்று முடிவு செய்து வேலையும் தொடங்கப்பெற்றது.

கொத்தனார் குமாரசாமி, 'இந்த நல்ல காரியத்தில் நான் முன்னின்று வேலை செய்கிறேன்' என்று கூறி கட்டிடம் கட்டும் பொறுப்பைத் தானே எடுத்துக்கொண்டார் ஊராரும், கல்லூரி கட்டிட வேலை அவர் எடுத்துக் கொண்டதால், பற்ற வேலைகளைச் செய்யலாம். என்று அவரவர் அவரவர் திறமைக்கேற்ற வேலைகளிலீடுபட்டனர்.

நான் எடுத்துக்கொண்ட வேலையோ, மிகவும் தொல்லை தருவது—கல்லூரிக்கான எல்லாவித பொருள்களையும் நிரப்புவது—விஞ்ஞானப் பகுதிக்கு வேண்டிய ஆராய்ச்சிப் பகுதிகள், சரித்திரப் பிரிவிற்கான படங்கள், பழங்கால சின்னங்கள், சிற்பங்கள், மொழிப் பகுதிக்கு வேண்டிய ஆதாரப் பொருள்கள், நூல் நிலையத்திற்கான ஏடுகள்—இப்படி மிகவும் தொல்லை தரும் சேகரிப்பு வேலையிலே நான் ஈடுபட்டிருந்தேன்.

என்னைப் பார்த்ததும் அவர் சிரித்தார்—அதிலே கேலி கரைந்து மறைந்திருந்தது என்று புலப்பட்டது. ஆகவேதான் ஒன்றுமறியாதவன்போல அந்தக் கேள்வியைக் கேட்டேன்,

என் கேள்வி அவர் காதிலே பட்டதும், அவர் முகத்திலே ஆச்சர்ய ரேகைகள்—கண்களிலே வியப்பொளி! கொஞ்சநேரம் மௌனமாக இருந்தார் பிறகு பேசினார்.

"ஏன் சிரிக்கிறேன் என்று விளங்கவில்லையா?" என்று அவரும் ஒரு கேள்வியை வீசிவிட்டு அவரது பார்வையைப் பின்புறம் திருப்பினார்.

அப்பொழுதுதான் கட்டி முடித்த கல்லூரிக் கட்டிடம் இருந்த பக்கத்திற்கு, என் பார்வையை இழுக்கவே அந்த முயற்சி என்று எனக்குத் தெரியும் — ஆகவே அப்பொழுதுதான் அவர் சிரிப்பிற்குக் காரணம் புரிந்துகொண்டவன்போலப் பேசினேன்.

"கல்லூரிக் கட்டிடம், முடிந்துவிட்டதே என்ற களிப்போ!" என்றேன்.

"இருக்காதா களிப்பு — இவ்வளவு மெதுவாகச் சொல்கிறாயே ழீதை" என்றார். அவர் குரலில கடுமையிருந்தது.

அந்தப் போக்கையும் சமாளித்துக் கொண்டு, மேலும் நான் பேசினேன்.

"இன்னும் மாணவ விடுதி கட்டப்படவில்லையே!" என்றேன்.

அவரது, தேள்வால் போன்ற மீசை துடிக்க ஆரம்பித்தது!

"கட்டி முடித்தவரைக்கண்டுகளிப்படைந்தால் போதும்" என்றார் கடுகடுப்போடு.

"களிப்பு எனக்கில்லையென்று நான் கூறவில்லையே!" என்றேன் நான், மிகவும் அமைதியாக!

"இந்தக் கட்டிடம் கட்டி முடிக்க எவ்வளவு பாடுபட்டேன் நான்— என்னைப்போல் கஷ்டப்பட்டிருந்தால் தெரியும் உனக்கு! இந்த ஆறு ஆண்டு காலத்தில் அடைந்த துன்பங்களை எண்ணிப் பார்த்தாலே பயமாக இருக்கிறது" என்றார் அவர்.

அவர் சோகத்துடன் பேசுகிறார் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்தது நான் ஏதும் குறுக்கில் பேசவில்லை. அவர் தொடர்ந்து பேசினார்.

"இந்தக் கல்லூரி கட்டிடம் கட்டி முடிக்க கற்கள், இரும்பு உத்திரங்கள், சிமெண்ட் மூட்டைகள், சாளரங்கள், கதவுகள் இன்னும் கட்டிடத்திற்கான சாமான்கள் வாங்க எவ்வளவு பாடுபட்டிருப்பேன்—பல நாள்கள் பட்டினி கிடந்திருப்பேன். கால்நடையாகவே கல்லிருக்கும் ஊருக்குச் சென்றிருப்பேன். கடும்பசியோடு ஊர் ஊராய்த் திரிந்திருப்பேன்"—அவர் குரல் தழுதழுத்தது—நான் 'த்சு...த்சு...' என்று ஒலி எழுப்பி என் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டேன்.

"அதுமட்டுமா கொத்தனார்கள் பலரைக் கொண்டுவர, எவ்வளவு பேரிடம் கெஞ்சியிருப்பேன் — சிற்றாள்கள், பெண் கூலிகள் இவர்களை அமர்த்தி, கட்டிட வேலையைத் துரிதப்படுத்த நான் பட்ட பாடு, இந்த உலகத்தில் எவரும் பட்டிருக்க முடியாது!" என்றார். நான் சிரித்தேன். அவருக்கு ஆத்திரம் அதிகரித்து விட்டது என்பதை, அவரது துடித்திடும் அதரங்கள் ஒலியில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன.

"கொத்தனாரே, கோபித்துக் கொள்ளக் கூடாது. இப்பொழுது

"ஞாயிறு"

[மாதமிருமுறை]

ஆசிரியர்: ஏ. சே. வேலன்

இணை ஆசிரியர்: தாமரைச்செல்வன்

தனிப் பிரதி அணா மூன்று

விற்பனையாளர் தேவை

"ஞாயிறு" கரந்தை,

(A) தஞ்சை.

தாங்கள் கூறிவந்த சங்கடங்களை நான் அறியாதவனல்ல—இந்த சங்கடங்களை எடுத்துக்காட்டி, இவைகளையெல்லாம் சமாளித்தவர் தாங்கள் என்று பாராட்ட வேண்டியவர்கள் ஊரார் — ஆனாலும் நீங்களே அவர்கள் பேசவேண்டியதைப் பேசுகிறீர்கள்!" நான் பேசிக்கொண்டேயிருந்தேன். அவர் என் பேச்சினூடே ஏதோ கேள்வி வீச முயற்சித்தார். முடியவில்லை! நான் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தேன்.

"நீங்கள் பட்டப் பாட்டைப் போல உலகத்திலே எவரும் பட்டிருக்க முடியாது என்றீர்களே அது உண்மை." என்று கூறினேன். அவர் முகத்திலே களிப்பு—

"இதையாவது ஒப்புக்கொண்டாயே — அவ்வளவுக்கு மனதில் இடம் இருந்ததே" என்றார் அவர், பெருமிதத்தோடு!

"அதற்குத் தக்க காரணம் இருக்கிறது கொத்தனாரே — உலகத்தில ஒரு கட்டிடம் கட்ட இந்த துயரங்களை யாரும அனுபவிக்கவில்லை — அனுபவிக்கத் தேவையில்லை! உங்களைப் போலத்தான் பாக் பல்கலைக் கழகம் கட்டியிருக்கிறார்கள்—பர்மிய படிப்பகம் அமைத்திருக்கிறார்கள்—சிலோன் சிந்தனை மாளிகை ஏற்படுத்தியிருக்கிறார்கள் — நீங்கள் ஆரம்பித்த பிறகு; ஆரம்பித்து, நீங்கள் முடித்த பொழுதே முடித்துவிட்டார்கள். ஆனால் அவர்கள் எல்லாம், உங்களைப்போல அவதி அனுபவிக்கவில்லை—ஆனாலும் நீங்கள் காட்டிய கட்டிடத்தைக் காட்டிலும் சிறப்பான முறையிலே கட்டி முடித்துவிட்டார்கள்!" என்றேன்.

"பேசுவதிலே விஷம் இருக்கிறது" என்றார் அவர்.

"விஷமில்லை — கொத்தனாரே, விவேகம் இருக்கிறது என்று சொல்லுங்கள். சுலபத்தில் முடிக்கவேண்டியதை, கடினமாக்கிக் கொண்டீர்கள். எளிதிலாக வேண்டிய காரியத்தை, துன்பக் குகையாக்கிக் கொண்டீர்கள் இதை நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும்" என்றேன்.

"அட, பாவி!" என்றார் அவர்.

"மன்னிக்கவேண்டும் கொத்தனாரே, நீரும் கொத்தனார்—குலாம் காதரும கொத்தனார் தானே! அவரும் கட்டிடம் கட்டினார், உங்களைப் போலத்தான்! அவர் உங்களைப் போல, சேற்றைப் பூசிக்கொள்ளவில்லை. மேலே கல் சரிந்து விழுந்து காயப்படுத்திக் கொள்ளவில்லை. இருந்தாலும் கட்டிடம் உருவாக்கப் பட்டுள்ளது. பாக் பல்கலைக் கழகம், பாரோர் புகழும் முறையில் வளர்ந்துவிட்டது!" என்றேன்.

அவர் ஆத்திரத்தின் எல்லைக்குப் போய் நின்று கூவினார். நான் அப்பொழுதும் சிரித்தேன்.

X X X

"அப்படித்தான் நீ பேசுவாய்— ஆனால் என்னைக் குறை கூற உனக்கு யோக்கியதை இல்லை!" என்றார்.

"குறை கூறுகிறேன் என்று தவறுதலாகக் கருதுகிறீர்கள்-உண்மையைச் சொன்னேன் — இன்னும் சொல்கிறேன். நீங்கள் ஆறு ஆண்டுகள் எடுத்துக் கொண்டீர்கள், இதைக் கட்டி முடிக்க! ஆனால் ஆறு மாதங்களில கட்டியிருக்கிறார்கள், அழகழகாக, பல கட்டிடங்கள்!" என்றேன். அவர் முகம் மேலும் மேலும் சிவந்துகொண்டேயிருந்தது.

"கட்டிடம் கட்டி முடிக்க நீ கையசைத்தது கூடக் கிடையாது. ஆனால் வாய் கிழியக் கத்துகிறாய் இப்பொழுது! ஒரு செங்கல் கூட எடுத்துக்கொடுக்கவில்லை — சேறு குழைத்ததில்லை — சேறுக்க, ஒரு குடம் நீர் முகந்ததில்லை"

"அதனால்......"

"என்னைக் குறை கூற உனக்கு யோக்கியதை இல்லை"

"யோக்கியதை என்பதற்கு என்ன அர்த்தம் தருகிறீர்களோ எனக்குத் தெரியாது. ஆனால் உங்களுக்கு வேறொன்று தெரிந்திருக்கவேண்டும். கலலூரி யென்றால் வெறும் கட்டிடம் மட்டுமலல-இன்னும அந்தக் கட்டிடத்தில் பல பொருள்கள் சேர்ந்தாகவேண்டும். இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும்"

"மகாப் பெரிய உண்மையைக் கண்டு பிடித்துவிட்டாய்!"

"கொத்தனாரே, 'காளை'யைப் பிடிக்க எனக்குத் தெரியாவிட்டாலும் அம்மாதிரிக் கருத்துக்களைப் பிடிக்கத் தெரியும் — ஆத்திரத்தைத் தூரத்திவிட்டு, நிதானமாக கேளுங்கள் கொஞ்சம்"

கட்டிடம் கட்ட நான் கல்லெடுத்துக் கொடுக்கவில்லை-சேறு குழைத்ததில்லை என்று சொல்கிறீர் உண்மை. ஒப்புக்கொள்கிறேன். அந்தப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொண்டுவிட்டதால், நான் ஒதுங்கி வேறு வேலையில் ஈடுபட்டிருந்தேன்-ஆனால் கல்லூரிக்குப் புறம்பான வேலையல்ல—கல்லூரிக்கு உயிரான வேலை அது!

விஞ்ஞானப் பயிற்சிக்கான சாமான்களுக்கு எத்தனை வகைக் கம்பெனிகளுக்குச் சென்றிருக்கிறேன். சரித்திர ஆராய்ச்சிக்கு, நாட்டின் மூலை முடுக்கெல்லாம் போயிருக்கிறேன் ஏடுகள் திரட்ட, எத்தனை பேர் வீடுகளின் வாசல்களிலே காத்துக் கிடந்திருப்பேன். ஒரே வேலையில் எல்லோரும் சேர்ந்திருப்பதைவிட, தங்களுக்குள் வேலைகளைப் பங்கு போட்டுக் கொண்டு செய்வதால் காரியம் வெற்றியாகும என்பதை ஏன் நீங்கள் உணர மறுக்கிறீர்கள்?"

"எல்லாம் கட்டிடம் வந்த பிறகுதானே"

"ஆம் கட்டிடம் கட்டிமுடித்த உங்களை நாங்கள் பாராட்டுகிறோம்-மகிழ்ச்சியடைகிறோம்—வாழ்த்து கூறுகிறோம்."

பெரியகாஞ்சியில்
25-2-51 ஞாயிறு
மு. அரங்கசாமி நினைவு மன்றம்
(தி. மு. க. கிளை)
துவக்க விழா
C. V. M அண்ணாமலை
தலைமையில்
சென்னை
என். ஜீவரத்தினம்
காஞ்சி
கலியாணசுந்தரம்
பேசுவர்.
இடம்: வாணிகர் தெருவுக்கடுத்த
பத்ரகாளியம்மன் தெரு

அவர் அத்தோடு தன் பேச்சை முடிப்பார் என்று எதிர் பார்த்தேன் நிறுத்தாதது மட்டுமல்ல, மேலும்பேசினார்-அவர் பேசிய பேச்சோ, என்னை மூச்சடைக்கச் செய்து விட்டது.

* * *

"கட்டிடம் கட்டியது நான் — இதை நீ மறுக்கவில்லை."

"மறுக் வில்லை, கொத்தனாரே— கட்டினீர், அதற்காக பாராட்டு, பரிசு எலலாம் பெற்றீர்"

"கேட்டதுவரை, விடை சொன்னால் போதும்—இந்தக் கட்டிடம் கல்லூரிக்காக என்றுதான் கட்டினோம்."

"ஆம்"

"அப்படியானால், கட்டியவனுக்கு, அதனை நிர்வகிக்கும் உரிமையும் உண்டல்லவா?"

"கொத்தனாரே, இந்த இடத்தில் தவறு செய்கிறீர் — வார்த்தையில் வழுக்கி விழுகிறீர்!"

"என்ன?"

'கட்டிடம் கட்டினீர் — யாருக்காக? இடமின்றி தவிக்கும் பல இளங்காளைகளுக்காக! அதுமட்டுமல்ல அவர்களோ, இதற்கு நாடகமாடி நிதி தந்திருக்கிறார்கள் — பாட்டுப் பாடி பணம் திரட்டியிருக்கிறார்கள் எப்படி எப்படியோ உதவி செய்தார், கட்டத் தெரிந்தவர் என்பதற்காகக் கூட அல்ல, கட்டுவதாக முதலில் வந்தவர் என்பதற்காக உமமைக் கட்டித்தரச் சொன்னார்கள்—ஊராரும் அதையேதான் எதிர்ப்பார்த்தார்கள்! கொத்தனாரே, தாங்களோ, கட்டினேன், கட்டியாளுவேன் என்கிறீர்!"

"கட்டியாள முடியாதா?"

"முடியுமா, முடியாதா என்பது கூடப் பிரச்சினையில்லை—தெரியுமா, தெரியாதா என்பதுதான் நம் முன் உள்ள பிரச்சினை உமக்கு கட்டிடம் கட்டத் தெரியும். அத்தோடு நிறுத்திக் கொள்ளவேண்டும்"

"சும்மா பேசாதே-கட்டிடம்கட்டியவன் நான்-ஆகவே, கல்லூரி பிரின்சிபாலும் நானேதான்! அது மட்டுமல்ல, என் கீழ் வேலை செய்தவர்கள் பேராசிரியர்கள்-சிற்றாள்கள் எல்லாம் விரிவுரையாளர்கள்-செங்கற்கள்தான் புத்தகங்கள்!"

"நீர், சுய சிந்தனையுடன் தானே பேசுகிறீர்!"

"வார்த்தை தடிக்கிறது-சுய சிந்தனையோடு மட்டுமல்ல, சுய நிர்ணயத்தோடு பேசுகிறேன். கட்டியவன் நான் ஆகவே கட்டியாளவேண்டும்"

"கட்டியாளும் - ஆனால் கல்லூரியாக இருக்காதே!"

"ஏன் இருக்க முடியாது"

"கல்லூரி நடத்துவது என்பது சாதாரண கட்டிடம் அமைப்பதல்லவே!"

"நடத்திப்பார்ப்போமே!"

"நடத்திப் பார்ப்பதென்ன, நினைத்துப் பார்த்தாலே தெரிகிறது- படிக்க பிள்ளைகளா வருவார்கள்- வந்தாலும் செங்கல் கையராய் திரிவார்கள் - கல்லிருக்கிறது கையிலே, நாயில்லை, தெருவிலே என்று பாடித் திரிவர்"

"நீ ஒரு பைத்தியம்!"

கொத்தனார் குமாரசாமி கூறிக் கொண்டே போய் விட்டார், நான் அப்பொழுதுதான் அவர்'ஒருமாதிரி' இருக்கிறார் என்று புரிந்து கொண்டேன்.

கொத்தனார், பிரின்சிபாலாவதாம் இதைக் கூறும் பொழுது என்னையுமறியாமல் சிரிப்புவந்தது - ஆனால் அவர் வேடிக்கைக்குச் சொன்னார் என்று முதலில் எண்ணினேன் பிறகு உண்மையிலே கூறினார் அப்படியென்றபொழுதுதான் எனக்குச் சந்தேகம் வளர்ந்தது

ஊருக்குள்ளே, அவரைப் பற்றி விசாரித்தேன்.

கட்டிடம் கட்டி முடித்த களிப்பினால் அப்படி மாறிவிட்டாராம். ஏனெனில், அவர் கட்டிடம் கட்ட பாடுபட்டார். அது முடிந்தவுடன் அதிக மகிழ்ச்சியினால், இப்படி மாறி விட்டார் என்றார்கள்—பரிதாபம்!

கொத்தனார் குமாரசாமி, கட்டிடம் கட்டிமுடிக்கும் பொழுது அலைந்த அலைச்சலை என் கண்களால் பார்த்திருக்கிறேன்—அவர் உழைப்பைக் கண்டு பாராட்டியதுண்டு.

ஆனால், இப்படி, அது முடிந்ததும், எதற்காக கட்டிடம் கட்டப்பட்டதோ, அந்த நற்காரியத்திற்கு எதிர்ப்பாக உளறிக்கொண்டு திரிவார் என்று எதிர்பார்க்கவில்லை.

"நாம் கட்டித் தந்தோம் இந்த கட்டிடம், அதில் ஒரு பெரிய கல்லூரி நடைபெறுகிறது—ஆண்டுதோறும், ஆயிரக் கணக்கானவர் படித்து பட்டம் பெறுகிறார்கள்" என்று மகிழ்ச்சியடைய வேண்டிய கொத்தனார் குமாரசாமி, 'பிரின்சிபாலும்' நானே என்று பிதற்றித் திரிவதைக் கண்டு ஊரார் பரிதாபப்படுகின்றனர்.

பேச்சுரிமைப் போர்வீரர்களுக்கு வரவேற்பு

—*—

திருச்சி—நாரணமங்கலத்தில் 144 மீறி, மூன்று மாத கடுங்காவல் தண்டனை பெற்று, திருச்சி சிறையில் அடைபட்டுக் கிடக்கும் இலட்சிய வீரர்கள்,

து. வானமாமலை
வி. எம். விஜயகோபால்
ஆர். ஆதிமூலம்
எம். வடிவேலு
மருதமுத்து
அமராவதி

ஆகியோர் 24-2-51 அன்று சிறையிலிருந்து விடுதலையாகின்றனர். ஏழு வீரர்களில் ஒருவரான

சேண்பகராசன்

26-2-51 அன்று, விடுதலை செய்யப்படுகிறார்.

இலட்சிய வீரர்களைப் பாராட்டி

26-2-51 திங்கள் மாலை

திருச்சி டவுன் ஹாலில்

ஈ. வெ. கி சம்பத்

பேசுவார்.

நாரணமங்கலத்தில்

28-2-51 புதன் மாலை

பொதுச்செயலாளர்

அண்ணாதுரை

சொற்பொழிவாற்றுவார்.

—திருச்சி மாவட்ட தி. மு. க.

திராவிட நாடு

ஞாயிறு] 25—2—51 [காஞ்சி

களஞ்சியம் காண வாரீர்! வாரீர்!!

"தூற்றினர்—சளைக்கவில்லை!
தாக்கினர்—தயங்கவில்லை!

பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல, குருதியும் கண்ணீரும் கொட்டியிருக்கிறேன். குடும்பத்திலே கவலை, கூடியிருப்போரிடையிலே தொல்லை, வீதியிலே சென்றாலோ 'வீணன்' என்ற வசைமாரி, ஊரிலோ, 'போகிறான் பார்!' என்ற கிண்டல், இத்தனையும் தாங்கிக் கொண்டேன். தங்குதடையின்றி, 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று கூறிக் கொண்டே உழைத்தேன். தேய்ந்தேன்; செத்தேன்—ஆனால் எனது எண்ணங்கள் சாகவில்லை, தளிர்த்துத் தழைத்துக் கொண்டே உள்ளன" என்று கூறுவது போல, தீட்டப்பட்டிருக்கும் மாயவரம் C. நடராஜனின் திரு உருவம் எங்கள் மாநாட்டுப்பந்தலில் இருக்கப்போகிறதென்று பெருமிதத்தோடு கூறினார், கே.கே. நீலமேகம், தஞ்சைமாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டின் வரவேற்புக்கழகத் தலைவர்.

'அது மட்டுமா? அண்ணன் நடராஜனின் பெயரைத்தான் மாநாட்டுப் பந்தலுக்கு வைத்திருக்கிறோம். எங்கள் மாவட்டத்தின் மற்றொரு கண்; மாவீரர், தேன் வாழ்வைச் சுவைக்கும் வசதியிருந்தும், வரண்ட பாலையில் நீர் தேடி ஓடி மாண்ட அஞ்சாநெஞ்சன், அருமை வீரன், அழகிரி அண்ணன் பெயர்தான் மாநாட்டு மேடைக்கு. அவரது திரு உருவமும் வைக்கப் போகிறோம். எவ்வளவு அருமை தெரியுமோ?" என்றனர், அருகிலிருந்த மாநாட்டுச் செயலாளர்கள் மாயவரம் பழனிச்சாமியும் குடந்தை பராங்குசமும்.

மாயவரம்—நடராஜன்

மாவீரர்—அழகிரி

இந்த இரு இலட்சிய வீரர்களின், பெயரைக் கேட்டதுமே, கண்ணீர் சிந்துவர், சுயமரியாதை இயக்க வரலாறு அறிந்தோர். பகுத்தறிவுப் பணிக்கு அவர்கள் பாதை அமைக்க பட்டபாடு கொஞ்சமல்ல! அவர்கள் அறிவுக் கோட்டையைக் கட்ட, தாண்ட வேண்டியிருந்த புயலும் புகைச்சலும் இலேசானதல்ல அத்தகைய மாவீரர்களை, நாட்டுக்குத் தந்த, மாவட்டத்திலே மாநாடு—நமது மாநாடு.

அப்போதுஞ் சரி, இப்போதுஞ் சரி, நமதியக்க வரலாற்றிலே தஞ்சைக்கோர் தனி இடம் உண்டு.

சொற் செல்வர்களையும், சோர்விலாச்சூரர்களையும், நாட்டுப்பணிக்குத் தந்திருக்கும்நன்செய்நாடு,அது.

ஆகவேதான், "மாநாட்டு அலங்காரம் எப்படி தெரியுமோ! உணவுக்கு இந்திந்த வகையான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்! பிரமாண்டமான பந்தல்!" என்றெல்லாம், வர்ணிக்கக் கேட்டபோது, நமது ஆர்வமும் ஆசையும் கூத்தாடத் துவங்கின. குதூகலமும் கொண்டோம், 'எத்தகைய இலட்சிய வீரர்களை பகுத்தறிவுப் பாசறை, பெற்றிருக்கிறது என்பதால்.

மாயவரத்திலே, வரும் மார்ச்சு 3, 4 தேதிகளில் நடைபெறப்போகும் தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு-நமது வெற்றியின் பிரதிபலிப்பாக இருக்கும். அதற்கான பெரும் பணியிலே தஞ்சை மாவீரர்கள் கொண்டிருக்கும் முயற்சியும் எழுச்சியும் ஏராளம்!

தஞ்சை மாநாடு, கூடும் நேரமோ, நெருக்கடியான கட்டம். நமது கழகத்தின் மீது, சர்க்கார் கண்வைத்தபடியே "எப்போது பாயலாம்—எப்படி பாயலாம்" என்று திட்டமிட்டுக் கொண்டுள்ளனர். அதிகாரப் பருந்து, பொல்லாச் சிறகடித்து பறந்துகொண்டிருக்கிறது! அதனடியில் கிடக்கும் மக்களோ புழுக்களாகி நெளிகிறார்கள் பசியால்—வேதனையால்! அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் சர்க்காரோ கஷ்டம் தீர்க்க முயலவில்லை. கண்ணும் பூச்சி விளையாட்டு நடத்திக் கொண்டிருக்கிறது.

உழவன் அழுகிறான்! உடை தருவோர் சாகின்றனர்! உழைப்பாளிகள் 'இருக்க இடமில்லை தங்க வீடில்லை' என்று சஞ்சல கீதம் பாடுகின்றனர்! காலை யெழுந்து கலப்பை தாங்கிச் சென்று மாலை முடிய உழைத்து இருட்டிய பின் திரும்பும் விவசாயியின் வாழ்வில் இன்பம் இல்லை' "சங்கடந் தீர்ந்திடும் வழி இல்லை! வதைக்கப்படுகிறார்கள்—மகன் மாடு மேய்க்கவும், மகள் சாணி யெடுக்கவும் அப்பன் கதிரைக் கார்க்கவுமான "தொழில்" சக்கரமாகிக் கொண்டிருக்கிறதே தவிர, அவன் வாழ்வில் கல்வி மணம் அரும்பவில்லை!

கதிர் சாய்த்து, தன் பொன் பரப்பு காட்டி, உலகை உய்விக்கும் வயல்கள் 'ஒடிந்த உழவனின்' நெற்றியிலே ஏற்படும் கவலைக் கோடுகளைப் போல, வெடித்துக் கிடக்கும் விபரீதநிலை, காவிரித்தாய் களிநடம்புரியும், தஞ்சையிலும் இல்லாமலில்லை. காடு! கரம்பு! தண்ணீர் இல்லாத பாகம்! தஞ்சை மாவட்டத்திலும், தொங்கிக் கிடக்கிறது — பற்பல பகுதிகளில்.

கொத்து கொத்தாய் நெல்மணிகள் தரும் கன்னிப் பூமியிலே பல பகுதிகள் காடாரம்பமாய் கிடக்கின்றன—பண்படாத உள்ளம்கொண்ட ஆட்சியாளரைப் போல.

புயல், வெண்சாமரம் தேடிகளை விரட்டிக்கொண்டிருக்கிற நேரம். சுதந்திர முழக்கம், சுகந் தேடி

தோழர் மு. கருணாநிதி

அண்மையில் திருவாரூர் சென்றிருந்த போது நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடக்கும் தோழர் மு. கருணாநிதியைப் போய்ப் பார்த்தேன். அவரது உடல் மிகவும் சீர்கெட்டிருப்பது கண்டு திடுக்கிட்டேன். எதிர்பார்த்ததற்கு மேலாக அவர், கொடுமையான 'ப்ளூரசி' என்னும் நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார். இந்த வியாதி தீர்ந்து அவர் உடல் நலம்பெற பூரண ஓய்வு அவசியமாகும் ஆகவே ஓராண்டுக்காவது அவர் எந்தவித பொதுக் கூட்ட நிகழ்ச்சிகளிலும் பங்கேற்காமலிருப்பது நல்லதென டாக்டர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். நானும், அவ்விதமே ஓய்வு எடுத்துக் கொள்ளுமாறு கருணாநிதியிடம் கூறிவிட்டு வந்தேன். ஆகவே, அவர் உடல் நலம் கருதி, தோழர்கள் அவருக்கு ஓய்வு தர ஒத்துழைப்பார்களென நம்புகிறேன்.

அண்ணாதுரை

கலைத் துரத்தத் துவங்கிவிட்ட வேளை.

இந்தச் சுந்தரமான நேரத்திலே, தஞ்சையிலே, நாம் கூடப் போகிறோம். தஞ்சையிலே, நாம் பன்முறை தவழ்ந்து விளையாடி யிருக்கலாம். ஆனால், இப்போது நாம் கூடுவதற்கும் அதற்கும் வித்தியாசம் இல்லாமலில்லை!

நமது நோக்கம், நமது கடமை, நமது எதிர்காலம் ஆகியவைகளை நன்செய் நாட்டினருக்கு இப்போது நல்ல முறையிலே, விளக்கப்போகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம், தன்னை, தஞ்சை நாட்டினருக்குக் காட்டிக்கொள்ளப்போகிறது.

இந்த அருமையான காட்சியில், பங்குகொள்ளவேண்டியது எல்லோருடைய கடமையுமாகும்.

காஞ்சியில் கலைவிழா

பச்சையப்பன் கல்லூரி அமைப்பு நிதிக்காக

வரும் மார்ச்சு 15-ந் தேதி முதல் 21 தேதி வரை காஞ்சி பச்சையப்பன் கல்லூரி அமைப்பு நிதிக்காக ஏழு நாட்கள் நாடக விழா நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

டி. கே. எஸ் சகோதரர்கள் குழுவின் 'ஔவையார்', 'அந்தமான் கைதி' 'மனிதன்' நாடகங்களும் கே. ஆர். ராமசாமி குழுவின் 'ஓர் இரவு' 'வேலைக்காரி' 'துளிவிஷம்' நாடகங்களும் டி. ஆர். மகாலிங்கம் குழுவினரின் "நாம் இருவர்" நாடகமும் தொடர்ந்து ஏழு நாட்கள் நடைபெறும். காஞ்சி பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் இந்நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நாடகங்களை நடத்தித்தர திரு. டி. கே. சண்முகம் சகோதரர்களும், திரு கே. ஆர். ராமசாமியும், 'வேலைக்காரியில் பங்கேற்று கலந்துகொள்ள திரு. டி. எஸ். பாலையாவும் 'நாம் இருவர்' நடத்தித்தர டி. ஆர் மகாலிங்கமும் அதில் கலந்துகொள்ள கே. சாரங்கபாணி, சி. வி. வி. பந்துலு ஆகியோரும் இசைந்துள்ளனர்.

பெருமூச்சால் பேசுவோர், புன்சிரிப்போடு உலவுவோர், "பேதமே தடா—பெரியவன் ஏதடா" என்று பாடித் திரிவோர்; பகல் முழுதும் பாடுபட்டு ஒரு கை பசிக்கும் வயிற்றிலும், இன்னொருகை, தலைக்குத் தலையணையுமாக உறங்குவோர், உழைப்போர், அங்கு கூடப் போகிறார்கள்.

மிட்டா மிராசுகள் அல்ல! ஜரிகைத் தலைகள் அல்ல! "ஏடா, மூடா—எங்கேடா கார்?" என்று கேட்கும் கனம்கள் அல்ல! கட்டியாள்வோம் இந்நாட்டை என்று நெஞ்சிலே ஆசை கொண்டோர் அல்ல! கருத்திலே சூதும் உதட்டிலே பாசமும் கொண்டோரல்ல! தர்பார் தாசர்களல்ல!

தயங்கா புலிகள் — தங்களையே நாட்டுக்கு அர்ப்பணித்தவர்கள், தரையிலே கிடப்பவர்கள், தன்னலம் கருதாதவர்கள், தரணி புகழ பரணி பாடும் விடுதலைப்படையினர்! வெற்றி தவிர வேறு ஏதுமறியா வீரச் சிங்கங்கள், மாயவரத்திலே, கூடப் போகின்றனர்.

கூடிப் பேசிவிட்டு கலைந்துவிட அல்ல! தங்களைக் காட்டி, தங்கள் கொள்கையைக் காட்டி, 'தரணியாண்டவனே-தவிப்பது நியாயமா?' என்று வீரக் குரலெழுப்பி, வீழ்ந்த சமுதாயத்தை எழுச்சியுறச் செய்யும் திட்டங்களைத் தீட்டுவதற்காக.

தஞ்சை மாவட்ட வரலாற்றிலே மாயவரம் மாநாடு — ஒரு கருத்தேடாக விளங்கப் போகிறது.

அரசியல், பொருளியல், சமுதாயம் ஆகிய எல்லாத் துறைகளிலும் புதுமையைக் காணத் துடிக்கும் புலிநிகர் மாந்தர்கள், அங்கே, அன்று புரட்சி முரசு கொட்டப் போகின்றனர்.

நமது களஞ்சியம் — அன்று, அங்கு, மக்களுக்குப் படையலாகப் போகிறது.

அறிவுப் பணியின் முரசொலியை அங்கே, நாம் எழுப்பப் போகிறோம். இந்த அரிய காட்சியைக் காண வாரீர்! வாரீர்!! என்று, வரவேற்புக் கழகத்தார் அழைக்கின்றனர். அந்த அழைப்பின் குரலை நாமும் எதிரொலிக்கிறோம்—எழுச்சியுற்ற திராவிடமே, வருக! சிங்கமுகம் திருப்பி சங்கநாதம் முழக்க வருக! வாட்டுந் தவலைகள், வம்பர்கள் கொட்டமடக்க வருக! வருக!! எல்லோரும் வருக! என்று, அழைக்கிறோம்.

★ ஏன், இது? ★

சென்னை பத்து லட்சம் டன் உணவுப் பொருள் கேட்டது.

"ஏ! அப்பா — அவ்வளவா?" என்று பெருமூச்சு விட்டு 4 லட்சம் தர ஏற்பாடு செய்கிறோம்—என்றது, டில்லி சர்க்கார்.

'எங்களால் நிலைமையைச் சமாளிக்க முடியாது. எப்படியாவது 10 லட்சம் டன் தாருங்கள்" என்று மீண்டும் வேண்டியது, சென்னை.

"4 லட்சம் டன்னாவது கிடைக்கிறதே என்று திருப்திப்படுங்கள். அதைக்கூட அனுப்ப முடியுமோ முடியாதோ என்று கவலைப்படுகிறோம்"—இப்படி, பதில் தந்தது, மத்திய சர்க்கார்.

சென்னை–10 லட்சம் கேட்டது!

ஆனால், அதே சமயத்தில்,

பம்பாய் மாகாணமும் பத்து லட்சம் டன் தேவையென்று மத்திய சர்க்காரைக் கோரியது.

கோரிக்கையை டில்லி மறுக்கவில்லை! "நீங்கள் கேட்டதில் முக்கால் பகுதி (8-டன்)பாவது தருகிறோம்" என்று உறுதி தந்திருக்கின்றனர், டில்லியார்கள்.

பம்பாய்க்கு 8 டன்!

சென்னைக்கு 4 டன்!!

ஒன்றுக்கு ஆதரவு; இன்னொன்றுக்கு அவமதிப்பு.

சென்னை, பம்பாயை விடச் சிறியதல்ல; மக்கள் தொகை குறைந்ததுமல்ல.

பம்பாய் மக்கள் பட்டினியால் வாட சென்னை மக்கள் மட்டும் தின்று கொழுத்து கிடக்கவில்லை.

பம்பாயில் தற்கொலைகள் கிடையாது; ஆனால் இங்கோ நாள்தோறும் பட்டினிச் சாவுகள்! பரிதாப மரணங்கள்!!

இருந்தும், டில்லி—சென்னையின் கோரிக்கையை ஏறகவில்லை.

ஏன் இது?

கேட்பது நாம் மட்டுமல்ல; பிப்-15 இதழில் "இந்து" தனது தலையங்கத்தில் கேட்டுள்ளது இக்கேள்வியை!

பதில் வேண்டாம்; சிந்தித்துப் பாருங்கள், ஏன், இது?

சக்கரதாரிகள்!

—1—

பாரத நாட்டின் அந்தஸ்து உயர்ந்துவிட்டது.

*　　*　　*

வெள்ளையன் வெளியேறியதும், நமக்கு வெளிநாடுகளில் ஏற்பட்டிருக்கும் செல்வாக்கும் பெருமையும் அமோகம்.

*　　*　　*

ஆசியாவுக்கே, இப்போது இந்தியா தான் ஜோதி. நமது புகழ், பிரதமர் நேரு வெளிநாடு செல்லும்போதெல்லாம் தேஜோமயமாகப் பிரகாசிக்கிறது.

இதுபோன்ற பேச்சுகளையும் எழுத்துகளையும், இப்போது அதிகம் காண்கிறோம்.

வெள்ளையாட்சி ஒழிந்து, நமதாட்சி மலர்ந்தது என்ற மகிழ்ச்சியில் — அவன் ஒழிந்ததும் நமது புகழை மறைத்துக் கிடந்த மாசு அழிந்தது என்பதை நிரூபிக்க வேண்டும் என்கிற ஆசையில், இது போலப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்.

இந்தியாவின் நிலையும் கவுரவமும் வளர்ந்திருக்கிறது என்று அடிக்கடி கூறிக்கொள்வதில், இரு ரகத்தவர் உள்ளனர்.

ஒரு ரகம், உண்மையாகவே இந்தியாவின் அந்தஸ்து உயர்ந்துவிட்டது—உலக நாடுகளிலேயே சிறந்ததாக ஆகிவிட்டது-அடிமை விலங்கு முறிந்ததால் என்று மனதார நம்புவோரைக் கொண்டது.

மற்றொருவகை, இதுபோல அடிக்கடி இந்தியாவின் பெருமையைப் பற்றிப் பேசவேண்டும். அப்போது தான், நாம் பெற்ற சுதந்திரத்தின் பெருமையும் அருமையும் தெரியும் என்று கருத்துக் கொண்டோரைக் கொண்டது.

உண்மையை மறைத்து, திரைமறைவில் சிங்கார வாழ்வு நடத்த விரும்புவோர், நமது சிந்தனைக்குரியவர்களல்ல.

ஆனால், மனதார நம்புவோர்களைப் பற்றியும், அவர்களது நம்பிக்கை உண்மைதானா என்பது குறித்துமே நாம் கவனம் செலுத்தவேண்டும்.

வீம்பால் பேசுவது சுலபம், ஆனால், அது பேசும் நேரத்துக்கு மட்டுமே மனதுக்குச் சாந்தி தரும்.

விஷபத்தை உண்மையென நம்பி விபரீதப் பாதையில் செல்வோருக்கு அவர்கள் செல்லும் திசையைக் காட்டவேண்டிய கடமை நம்முடையது நம்முடையது மட்டுமல்ல நாட்டின் நலன் விரும்பும் எவருடையதுமாகும்.

சுதந்திரம் பெற்றது இந்தியா — உண்மையான சம்பவம்.

ஆனால், சகல சுகமும் பெற்றுவிட்டதா? — இது சிந்தனைக்குரிய கேள்வி.

அடிமை விலங்கு முறிந்தது — நடந்த நிகழ்ச்சிதான், இது.

ஆனால் மீடு அடைந்ததா? — எழுப்பப்படவேண்டிய கேள்வி.

கள்ளி படர்ந்திருந்த தோட்டத்தில் பயிரிடச் சென்று கள்ளி நீக்கியதும் மண் எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளாமல், 'கள்ளியை நீக்கிவிட்டோம்! யார் தெரியுமா, கள்ளியை வெட்டியது? நாங்கள்தான்!' என்று, "நாங்கள்! நாங்கள்!" என்று பெருமை பாடிக் கொண்டேயிருப்பது பலன் தராது; நிலத்தில் பயிரையும் காண முடியாது.

அதுபோலவே, 'சுயராஜ்யம் பெற்றோம்! சுதந்திரப் போராட்டம் நடத்தினோம்' என்று, எதற்கெடுத்தாலும் கூறிக்கொண்டேயிருப்பதும், 'அந்தச் சுதந்திரம் பெற்றதால் உயர்ந்துவிட்டோம். நமது புகழ் இமய உச்சிக்குப் போய்விட்டது' என்று பேசிக்கொண்டேயிருப்பதும், க்ஷணநேர சாந்திக்கு, உதவுமே ஒழிய, நாட்டின் நலனுக்கு உருவான பலனைத் தரமுடியாது.

ஆனால், இந்த உண்மையை உணர்ந்தோ அல்லது உணராமலோ இங்குள்ள தேசியத் தோழர்களும் அவர்தம் தெய்வமாந்த இதழ்களும், புதிதாக புறப்பட்டிருக்கும் சாது முனை சிந்துநடைக் கூட்டமும் எப்போது பார்த்தாலும், இந்தியாவின் பெருமை, சர்க்காரின் திறமை குறித்து, பேசிக் கொண்டேயிருக்கிறார்கள்.

சுதந்திரம் மலர்ந்தது உண்மை!

சுயராஜ்யம் வந்ததும் உண்மை!

ஆனால், அதற்குப்பின் ஏற்பட்ட மாற்றங்கள் எவையெவை, அதனால் இந்தப்பூமிக்கு ஏற்பட்ட பெருமையும் கவுரவமும் எந்த அளவு, என்பதை எண்ணிப் பார்ப்பது, அவசியமானதாகும்.

உரத்துப் பேசுவதும் ஊர் நிந்தவன் ஆவதும் அல்ல ஒரு நாட்டுக்குள்ள பெருமை.

அரசியல் தூதர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதும் அங்கிருந்து பலரை அழைத்து விருந்து வைப்பதும் அல்ல, ஒரு நாட்டின் நிலையான பெருமை.

வெளி நாடு செல்லலாம், விருந்தும் பாராட்டும் பெறலாம், ட்ரூமனின் கைலாகும், ஸ்டாலினின் வாழ்த்தும், சிங்காரப் பயணமும், ஐக்கியநாடுகள் சபையில் இடமும், கிடைக்கலாம்.

ஆனால் இந்த 'மரியாதை' களோடு நின்றுவிடாது, ஒரு நாட்டின் வாழ்வு. மக்களுடைய பசியும் தேவையும் பண்டித நேருவுக்கு கிடைக்கும் பாராட்டுரையாலோ, பாரதநாட்டைப்பற்றி ட்ரூமன் தரும் வியாக்கியானத்தாலோ நின்றுவிடாது.

சுதந்திரம் பெற்றது இந்தியா.

சுகமாக வாழ்கிறார்கள் மக்கள்.

என்ற பாராட்டுரைதான் நிரந்தரமானதாகும். "கள்ளியைக் களைந்தோம், தோட்டத்துக்குள் விஷவிருட்சத்தின் விதைகள் படர்ந்துவிட்டன" என்று கூறும் நிலையில் ஆனால் கேலிக்குரியதாகும்.

இந்த உண்மையை, இங்குள்ள நண்பர்கள் உணர மறுக்கிறார்கள். உணர்ந்தோர் உரைத்தாலும் உறுமுகிறார்கள்.

நல்லது எதுவும் ஏற்படவில்லை.

இருந்ததும் கெட்டு குட்டிச்சுவராகிவிட்டது.

நாடு பலவீனங்களுக்கு இரையாகிவிட்டது.

நன்மையைத்தான் செய்யவில்லையென்றால் தீமையையும் தந்துவிட்டனர்.

இந்திய சர்க்கார், சுயராஜ்யம் பெற்றபின், எத்தகைய நிலையைநாட்டில் உருவாக்கியிருக்கிறதுஎன்பதை விளக்கியுள்ளார் ஜான் மத்தாய் சென்னை கிருத்துவக் கல்லூரியில் சென்ற 18ந்தேதி பேசியபோது.

ஜான்மத்தாய் — இந்திய சர்க்காரில் நிதிமந்திரியாக இருந்தவர். சிக்கலான நேரத்தில் சுமை நிறைந்த பொறுப்பேற்று, காரியங்களை நடத்தியதாகக் காங்கிரஸ்காரராலேயே பாராட்டப் பெற்றவர். அவர், இது போலப் பேசியிருக்கிறார்.

வெளியிட்டிருப்பதுஜான்மத்தாய் பழையநிதி மந்திரி என்பதற்காக நாம இதைக் குறிப்பிட விரும்பவில்லை ஏனெனில், காங்கிரஸ்ஆட்சி இந்த மூன்று ஆண்டுகளில நாட்டில் எத்தகைய மோசமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறதுஎன்பதை எல்லாருமே அறிவர்!

நாட்டு மக்கள் நாயினும் கேடாய் அலைவதும், அதைத்தீர்க்க-வக்கற்று இந்த சர்க்கார் தகைப்பதும உலகறிந்த செய்தியாகும். அதையல்ல, நாம் குறிப்பிட விரும்புவது.

ஆனல் ஊராள்வோர் ஏற்றிருக்கும "பொறுப்பு" எவ்வளவு அருவருக்கத்தக்கநிலைக்குவந்துவிட்டது என்று, அவர், மேலும் சிலவார்த்தைகள்மூலம் விளக்குகிறார் — விளக்குகிறார் என்றால் மேற்பூச்சாக இந்தக் காங்கிரஸ் ஆட்சியைக் குறைசொல்லவேண்டுமென்ற எண்ணத்தில் அல்ல. "சர்க்காரை நடத்தும் பொறுப்பிலிருந்தவன் நான். ஆகவே அதிலிருந்து நான் தெரிந்துகொண்டதைக் கூறுகிறேன்" என்று குறிப்பிட்டுவிட்டு, அவர் பேசியிருக்கிறார்.

> "இன்று மிகவும் சீர்கெட்டுப் போயிருப்பது சர்க்காருடைய நிர்வாக இயந்திரமாகும். இன்று நாட்டுக்குத் தேவைப்படுவது சரியான நிர்வாகமே யாகும்."

நிர்வாகம் கெட்டுவிட்டது! நாட்டை ஆளும் பொறுப்பிலிருப்போரின் நிலை சீர்குலைந்துவிட்டது! பரிதாபம் நிரம்பிய கோரமான உண்மை! அதைக் கூறுவதோ ஒரு எதிரி அல்ல; சர்க்காரை நடத்திய ஒருவர்.

மத்தாய், தனது விளக்கத்தை மேற்கூறிய வார்த்தைகளோடு நிறுத்திக் கொள்ளவில்லை. மேலும் செல்கிறார். இந்த இடத்தைத்தான், 'அது செய்வோம்—இதைச் செய்தோம்' என்று பெருமைப் பரணி பாடுவோர் கூர்ந்து கவனிக்கவேண்டும்.

> நிர்வாக இயந்திரம் ஒரு ஆகாய விமானம். அதை நடத்திச் செல்லப் போதிய பெட்ரோல் வேண்டும். ஆனல், நமது விமானத்துக்குப் புதிதாக நாம் பெட்ரோல போடவில்லை. முன்பு போட்ட பெட்ரோலின் மிச்ச மீதியிலேயே ஓடிக்கொண்டிருக்கிறது!"

என்ற பகிரங்கமாக வெளியிட்டிருக்கிறார், வெள்ளையன் விட்டுப்போன அதிகார இயந்திரம் இருப்பதால் தான் இந்த ஆட்சி ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை உதாரணத்தோடு, மத்தாய், தன் உரையை முடித்துக் கொள்ளவில்லை. மேலும் கூறுகிறார்.

> "ஏதோ ஓரளவுக்காவது நாம் இப்போது காரியங்களை நடத்திவர முடிகிறதென்றால் அது பழைய சர்க்கார் நடத்திய நிர்வாக இயந்திரத்தின வேகம் இன்னும் இருப்பதால் தான் அதனால தான் காரியங்கள் வழக்கம் போல இதுநாள் வரை நடைபெற்றுக் கொண்டுள்ளன!"

வெள்ளை சர்க்கார் விட்டுப்போன நிர்வாக இயந்திரம் தான் வேலை செய்கிறது! சுயராஜ்ய சர்க்காரின் நிர்வாக இயந்திரமல்ல வேலை செய்வது!—கூறுகிறார் ஜான் மத்தாய், இந்தியஉபகண்ட ஆட்சியின் காவலராக இருந்தவர்

'சுயராஜ்யம் வரட்டும்!"

"ராம ராஜ்யம் எப்படியிருக்கும் தெரியுமா?"

"வெள்ளையனுக்கு ஆடும் பொம்மைகளின் வாலாட்டம்எங்களிடம் பலிக்காது?'

என்றெல்லாம் வீர முழக்கமிட்ட காங்கிரஸ் நண்பர்களுக்கு, இதைக் கேட்கும்போது, கோபம் வரத்தான் செய்யும்.

கோபத்தால் உண்மையை மறைத்துவிடவா முடியும்!

மத்தாய் கூறுவது போல, பழைய சக்கரமதான் சுற்றுகிறது. வெள்ளையரின் ஆட்சி முறைதான், இன்னும் சுற்றுகிறது.

சக்கரம் சுற்றி விட்டுக்கொண்டேயிருந்தால்தான் உருளும். அதற்குப் பதில், சுற்றாமல விட்டுவிட்டால் முன்பு சுற்றிவிட்ட வேகத்தில், சிறிது நேரம் ஓடும். பிறகு வேகம் குறையக் குறைய ஓட்டமும் ஒடுங்கி, பிறகு நின்றுவிடும.

நாம், நாட்டில் இன்று காண்பது, இந்த நிலையைத்தான்.

நிர்வாகச் சக்கரம் முன்புபோலச் சுற்றவில்லை, வேகம் குறைந்து கொண்டே போகிறது — ஊழலும் திறமைக் குறைவும் சர்க்காரைத் தாங்கிச் செல்வோரிடையிலே அதிகரித்துக் கொண்டே உள்ளன.

காரணம், சக்கரத்தைச் சுற்றிவிடும் பொறுப்பான மந்திரிப்பீடம் ஏறியவர்களின் போக்கும் திறமையும், சரியில்லாமலிருப்பதுதான்.

சக்ரதாரிகளானோர், சக்தியுள்ளவர்களாயிருந்தால சக்கரத்தின் வேகம் குறையாது.

ஆனல், இப்போது இந்திய பூபாகத்தில் உள்ள நிலைமையோ சக்கரத்துக்கு சக்ரதாரிகள் ஆதாரமாக இல்லை சக்ரதாரிகளுக்கு ஆதாரமாக இருக்கிறது, சக்கரம்.

இந்த உண்மையை, 'எங்கள் பெருமையைப் பாராய்! இதுகள் யார் தெரியுமோ கேளாய்!! 'என்ற வீம்புபாடும், தியாகத் திருக்கூட்டம் உணர வேண்டும்.

வெள்ளையாட்சி ஒழிந்தது — ஆனல ஆள்வது இவர்களுடைய புத்தியல்ல; வெள்ளையன் விட்டுப்போன, நிர்வாகச் சக்கரம்.

இதுபோல மத்தாய் கூறுகிறார். மார்தட்டி, தோள் தூக்கி ஆர்ப்பரிக்கும் தோழர்கள் இதை உணர வேண்டும்.

சி. என். ஏ.

சுற்றுப் பயணம்

24-2-51	வாணியம்பாடி (மாணவர் மாநாடு)
25-2-51	காலை சேலம் கல்லூரி; மாலை திருச்செங்கோடு
26-2-51	கணியூர்
27-2-51	காங்கேயம்
28-2-51	நாரணமங்கலம்
1-3-51	துறையூர்
2-3-51	மணப்பாறை
3-3-51	மாயவரம் மாநாடு
4-3-51	மாயவரம் மாநாடு
6-3-51	அரூர்

'மந்திரி' தானம்!

கண்டு பிடித்துவிட்டேன்— அட பாவி, உன்னை ஊரெல்லாம் புகழ்கிறது, உத்தமன், சத்தியசந்தன் என்றெல்லாம்! நீயோ, கள்ளமார்க்கட் கழுகு —கொள்ளை இலாபத்தால் கொழுக்கிறாய்—இதோ ஊராரிடம் கூறி உன்னை என்ன பாடு படுத்துகிறேன், பார்!

X X X

துப்பறியும் நிபுணர் இவர்— கண்டு பிடித்துவிட்டாராம்! என்னப்பா, 'கொலம்பஸ்'— நீ கண்டுபிடித்த 'அமெரிக்கா'வைத்தான் காட்டேன்!

X X X

திருட்டுச் சந்தையிலே, அரிசி மூட்டைகளை எவ்வளவு அதிக விலைக்கு விற்றாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். விற்றவிலை, வாங்கிய ஆள், தரகன் எல்லா விவரங்களும் அறிவேன் — ஆகவே, கேலி பேசித் தப்பமுடியாது!

X X X

ஐயோ, வேண்டாம், வேண்டாம்—இந்தா, இரண்டாயிரம் வைத்துக்கொள் — என்னைமட்டும் காட்டிக்கொடுத்து விடாதே!

X X X

கள்ள மார்க்கட் கண்ணுசாமியும், ஊர்நலம் விரும்பி உத்தண்டமும் இப்படிப் பேசிக்கொண்டனர்.

கொள்ளை இலாபக்காரனோ, இரண்டாயிரத்தை நீட்டினான்— உத்தமன் உத்தண்டம் பணப்பித்தனானான்! உள்ளம் வேண்டாம் என்றது—நிலைமையோ, கையை நீட்டு என்று கட்டளை பிறப்பித்தது.

கை நீண்டது — இரண்டாயிரம் இடம் மாறிற்று—அவனது நீண்ட நாக்கு அடங்கிவிட்டது!

நாட்டிலே, இம்மாதிரி நடவடிக்கைகள், 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்' வளர்ந்தபடி உள்ளன.

இலஞ்சத்தால் காரியம் சாதிப்பது —இன்றைக்கு சர்வசாதாரணமாகி விட்டது

நாட்டுமக்களிடையே, இந்நிலை இருக்கக்கூடாது என்று நல்லறிவாளர்கள் நாள்தோறும் கூறுகின்றனர். ஆனால், இன்று நாடாள்வோரிடையே இந்த நயவஞ்சக முறையைப் பார்க்கிறபொழுது, நாம் சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.

சாம,
பேத,
தான
தண்ட

முறைகள், எல்லாம் பிரயோகிக்கப்படுகின்றன, இன்றைய ஆட்சியில்!

சாம, பேத முறைகளைச் செய்து செய்து அலுத்துவிட்டனர்.

தண்ட முறையைக் கையாண்டு, தளர்ச்சியே கண்டுவிட்டனர்.

தான முறையிலே, அவர்கள் வெற்றியடைந்திருக்கிறார்கள், ஒருமுறை, இருமுறை மட்டுமல்ல, பல தடவைகளில்!

'எதிர்த்துப் பேசுகிறானா, இழுத்துவா அவனை, இப்படித் தூக்கோடு கட்டு, சவுக்கால் அடி, என்று கூறுவதால் அடக்க முடியவில்லை—எனவே வேறொரு முறையைக் கையாள்கின்றனர்.

எதிர்த்தவனை அழைத்துவந்து, விருந்து நடத்தி, அவன் புகழ்பாடி, அவனைத் தம் வலையில் வீழ்த்திடும் முறையை, 'டெல்லி' இப்பொழுது கடைப்பிடித்து வருகிறது.

சில நாட்களுக்கு முன்னால், இந்திய சர்க்கார், சர்க்கரை வாங்கியதில், 133 இலட்சம் நஷ்டம் என்று புள்ளி விவரத்தோடு, காட்டி, இந்த நஷ்டத்திற்குக் காரணம் காண ஒரு கமிட்டி வேண்டும் என்று கேட்டார், தியாகி என்ற உறுப்பினர்.

அந்த அவையே, தலை குனியும்படி, இந்த சர்க்காரின் 'கையாலாகாத தனத்தை' விளக்கினார். தங்கள் திறமைக் குறைவால் பொதுமக்களின் பணத்தைப் பாழாக்குகிறார்— இதனை அம்பலப் படுத்தினார் அவர்.

இதனால், பிரதமர் நேருவுக்கும், உணவு மந்திரி கனம் முன்ஷிக்கும் மனவருத்தம் ஏற்பட்டதாகக் கூட அறிந்தோம்.

உத்தண்டம், கள்ளமார்க்கட் கண்ணுசாமியை மிரட்டினான் — அவனது கொள்ளை லாபமடிக்கும் போக்கை அம்பலமாக்குவேனென்று கூவினான். தந்திரக்கார கண்ணுசாமி இரண்டாயிரத்தால் அவன் வாயை அடக்கினான்.

உத்தண்டம் வாயை மூட இரண்டாயிரம்! இதோ, அதே முறையில் 'டெல்லி' நடந்துகொண்டுள்ளது.

சர்க்காரின் ஊழலை வெளிப்படுத்தினார் தியாகி. இப்பொழுது அவரை உதவிநிதி மந்திரியாக்கி விட்டனர் — நிதியிலே ஏற்பட்ட கோளாறை எடுத்துக் காட்டினார் — எனவே நிதிமந்திரி யாக்கப்பட்டார். இனி எப்படிப் பேசமுடியும்!

இரண்டாயிரம்—மந்திரிப் பதவி— இரண்டிற்கும் வித்தியாசம் ஏதுமில்லை!

ஊழல்களை அம்பலப்படுத்துபவர்களை இப்படி, 'விலைக்கு' வாங்கப் பார்க்கின்றனர்—முதலில்! முடியாவிட்டால்தான் ஆத்திரத்தில் கண்டபடி, 'அடக்குமுறை' நாட்டியம் ஆடுகின்றனர்.

எதிர்ப்பவர்களையெல்லாம், இப்படி 'விலை' கொடுத்து வாங்குவதென்றால், மந்திரி சபையின் எண்ணிக்கை என்ன ஆவது! ஆளும் அவைதான் எப்படி இருக்கும் என்று கேட்கிறீர்களா? அதுபற்றிய 'கவலை' உங்களுக்கு—ஏன், வரி தருகிறவர்கள் நீங்கள்—அவர்களுக்கு என்ன வந்தது, ஆகவேதான், இப்படி, 'மந்திரி'ப் பதவி, வீசியெறியும் எலும்புத் துண்டாகிறது! வெட்கம், வெட்கம்!

கரைகிறது!

காங்கிரசின் போக்கு கண்டு சகிக்காததால் விலகி, நமது கழகத்தில் சேர முடிவு செய்திருப்பதாய் வந்தவாசியைச் சேர்ந்த கீழ்க்கண்ட தோழர்கள் தெரிவிக்கின்றனர்.

அ. குப்புசாமி (பஸ் டிரைவர்,)
V. ரங்கநாதன் (பஸ் டிரைவர்)
P. முனிரத்தினம் (பஸ் கண்டக்டர்)
பரமானந்தன்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டு மலத்தை, மனிதருக்கு விற்பனை செய்தனர், சாப்பிடுவதற்கு! அத்தகைய கொடூரமான செயல், பட்டப் பகலில் இந்த அக்கிரமம், பகிரங்கமாக நடைபெற்றிருக்கிறது.

இந்தக் கோரச் செய்தியை, அமைச்சர் அறிவிக்கிறார்.

தமது திருவாயால், இந்திய உள்நாட்டு மந்திரி, திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்.

தகவலைத்தந்தாரே ஒழிய, இந்தச் சமுதாய விரோதிகள்மீது இன்னின்ன நடவடிக்கை எடுத்தேன் என்று, கூறவில்லை.

காரணம், அத்தகையவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும், திட்டவட்டமாக எடுக்கப்படவில்லை.

அந்த நாசகாலர்கள் நடமாடிக் கொண்டுதான் உள்ளனர்.

சமுதாய விரோதிகள் சர்ப்பங்களாகச் சீறிக்கொண்டிருக்கின்றனர், நாட்டில்.

அவர்களை அடக்கத் தனிச்சட்டம் இல்லை, கொண்டுவரப்படவில்லை.

ஆனால், அரசியலில் ஈடுபட்டு தங்கள் கொள்கைகளுக்காகப் போராடும் ஒரு கட்சியினரைச் சிறையில்போட 'தனி'ச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தப் பாதுகாப்புச் சட்டம் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது தான்.

அது செல்லாது என்று அச்சட்டத்தில உள்ள சந்துபொந்துகளைக் குறிப்பிட்டு மாகாண உயர்நீதி மன்றங்கள் தீர்ப்பளிக்கவே, இப்போது அந்தக் குற்றங் குறைகள் தவிர்க்கப்பட்டுச் புதுச்சட்டமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டப்படி சந்தேகப்பட்ட எவரையும் பிடித்து ஜெயிலில் போடலாம்.

சட்ட வரம்புக்கு மீறிய செயல்களில் ஈடுபடுவோரைத் தடுக்கவே இந்தப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது சர்க்காரால்.

குற்றவாளிகளையும், கொடுங்கோலர்களையும் பிடிக்கப் போலீசும், பிடிபட்டோரை விசாரிக்க நீதிமன்றங்களும், தண்டிக்கப்பட்டோரை அடைக்க சிறைச்சாலைகளும் இருக்கும்போது சந்தேகப்பட்டோரையெல்லாம் பிடித்துச் செல்வதா? ஏன்? நியாயமா? — என்ற கேள்வி நாட்டில் எழும்பாது என்ற எண்ணத்தில் சட்டம் உருவாகிவிட்டது.

கே:—"இந்தச் சட்டம் காங்கிரஸ் கட்சியைத் தவிர, பிற அரசியல் கட்சிகளை அடக்கத்தானே?"

ப:— இல்லை. கம்யூனிஸ்டுகளின் நாசப் போக்கைத் தடுப்பதற்காகத் தான்.

சட்டசபையில் எழும்பிய ஒரு கேள்விக்கு, ஆச்சாரியார் "கம்யூனிஸ்டுகளுக்குமட்டுந்தான்" என்ற அர்த்தம் தொனிக்க, பதில் தந்திருக்கிறார்.

ஆனால், சட்டம் அப்படியில்லை. கம்யூனிஸ்டுகளுக்காகப் பிரத்தியோகமாகத் தயாரிக்கப்பட்டது- என்று, சட்டம், தென்படவில்லை.

அப்படியேயிருந்தாலுங்கூட, கம்யூனிஸ்டுகள் என்போரும் சராசரி மனிதர்கள்தானே ஒழிய, சித்துவித்தை கற்றவர்களோ, மந்திர தந்திரவாதிகளோ, அல்ல!

அவர்கள் போக்கு, நாட்டுக்குத் தீங்குதரும் என்றால், அவர்களைப் பிடித்துத் தண்டிக்க இப்போதுள்ள சட்டமே போதும். அதற்கெனத் தனிச்சட்டம் தேவையில்லை.

ஆனால், இத்தனிச் சட்டப்படி, சர்க்காருக்கு கிடைக்கும் செதி யார் மீது சந்தேகம் எழுப்புகிறதோ அவரை உடனே, பிடித்து, தள்ளலாம் சிறைக்குள்.

விசாரணையில்லாமல், அவர்களை காவலிலேயே வைத்திருக்கலாம்.

விசாரணையின்றி சிறை! - இந்த அடக்குமுறையை நீதியும் சட்டமும் அனுமதிக்காது. நாகரீக முதிர்ந்த எந்தச் சமுதாய முறை, இது போன்ற 'சுதந்திரம் பறிபோகும்' சட்டங்களை அனுமதிக்காது.

இது போன்ற, மனித உரிமைகள் பறிபோகும் சட்டங்கள் புதுப்பிக்கப் பட்டுக் கொண்டேயிருந்தால், சுதந்திரம், மனிதஉரிமை, என்பதெல்லாம் வெறும் சொல் அலங்காரங்கள் ஆகுமே யொழிய சுதந்திர நாடு என்பதற்கு அடையாளம் ஆகாது.

ஆனால், வெற்றி முழக்கமிட்ட இந்த வீராதி வீரர்கள், தங்களைக் காத்துக்கொள்ள, தங்கள் பதவிகளைக் காத்துக்கொள்ள, போதாத் தேர்தல் நெருங்கும் நேரத்தில் இது போன்ற, பாதுகாப்புகளைத் தங்களுக்கு— நாட்டுக்கு அல்ல!—தேடிக் கொள்கிறார்கள்.

வெட்கங்கெட்ட காட்சி!

பதவி—மனிதாபிமானத்தைக்கூட மறைக்கிறது.

கம்யூனிஸ்டுகள்! — என்ற பூச்சாண்டி காட்டி, மனித உரிமைகளை மண்ணிலே வீசுகின்றனர், காங்கிரஸ் ஆட்சியினர்.

இந்தக் குற்றச் சாட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள, அன்பர் ஆச்சாரியார் முன்னுக்குப் பின் முரணான வாதங்களைத் தேடித் தருகிறார்!

குற்றம் செய்பவன் உளறுவதும், தவறு செய்தவன் தடுமாறுவதும் சகஜம்.

இந்த நிலையில்தான், எதை எதையோ ஆதாரமென எண்ணி அன்பர் ஆச்சாரியார், கூறியிருக்க வேண்டும்.

பாதுகாப்புச் சட்டத்துக்கு அரண் அமைக்கும் நோக்கத்திலாயினுஞ் சரி அல்லது உண்மையான நோக்கோடு கூறியிருந்தாலுஞ் சரி, உலக முழுமையும் வியாபித்துவரும் ஒரு கொள்கையைக் குறித்து, முரண்பட்டு பேசுவது—நலதல்ல; நாட்டுக்கு, ஆள்வோருக்கு.

அவ்வளவு வீம்போடு, 'இந்திய முதலாளிகளுக்கு நல்ல பிள்ளையாக இருக்கிறோமே —அதை இழப்பதா?' என்ற நினைவில் பேசினாலும் அதன படி நடக்கத் துணிவுண்டா, என்பதை உணரவேண்டும்,

ஏழைகளின் குமுறலைத் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ளும் எந்தக் கொள்கையையும் வீண் மிரட்டலால் ஒடுக்கிவிடமுடியாது.

இதைத் 'தோல்வியின் பொருள்' தெரிந்த அன்பர் ஆச்சாரியார் உணரவேண்டும்.

ட்ரூமன் தோரணையில் பேசுவது சுலபம். ஆனால் அதுதரும் விபரீத விளைவுகளைத்தாங்குவதற்கு 'சாணக்கியமும் தந்த்ரோபாயமும்' போதாது.

ஆதிக்க வெறியில் உருளும், அவர்தம் கூட்டம், இதை, உணர்வது நல்லது.

—

விடுதலை முரசு கொட்ட வீரர்களே, வாரீர்!

மாயவரம் ✻ கூறை நாடு சி. நடராசன் பந்தலில் அழகிரி அரங்கில்	தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக **முதல் மாநாடு** ★	மார்ச்சு 3, 4 சனி, ஞாயிறு தேதிகளில்

தலைவர்: **என். ஜீவரத்தினம்**
(சென்னை கார்ப்பரேஷன் கவுன்சிலர்).

துவக்குபவர்: **காஞ்சி. கலியாணசுந்தரம்**

பொதுச் செயலாளர் அண்ணாதுரையும்
கழக முன்னணி வீரர்களும் கலந்து கொள்வர்.

இன்னிசை: நாகூர் ஹனிபா, மாயவரம் ராமசாமி

பொதுச்செயலாளர் **அண்ணாதுரை**, நடிக நட்சத்திரம் **கே. ஆர். ராமசாமி**
குழுவினர் நடிக்கும் நாடகங்கள்

சந்திரமோகன் சனி இரவு	**நீதிதேவன் மயக்கம்** ஞாயிறு இரவு

கே. கே. நீலமேகம் *வரவேற்புக்குழுத் தலைவர்* வை. மாணிக்கம் *விளம்பர உறுப்பினர்*	ஆ. முத்துக்குமாரசாமி ஆர். ஜோசப் *தொண்டர் படைத் தலைவர்கள்.*	வி. பராங்குசம் ஆர். பழனிச்சாமி *செயலாளர்கள்*

திட்டம் தீட்டிடத் திரண்டு வாரீர்!

Edited Printed & Published by C. N. Annadurai M. A at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.